NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 4 February 2025

வேலையிடத்தில் இனப் பாகுபாடு குறித்த ஆய்வின் முடிவுகள்

# தொடர்ந்து பாதிக்கப்படுவதாக சிறுபான்மையினர் கருத்துரைப்பு

**கி. ஜனார்த்தனன்**



வேலையிடத்தில் பாகுபாடு தொடர்பாக பதிவான சம்பவங்கள் ஒட்டுமொத்தமாகக் குறைந்திருப்பதாகக் கொள்கை ஆய்வுக் கழகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை குறிப்பிடுகிறது. **கோப்புப் படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

சிங்கப்பூரர்கள் பொதுவாக வேலையிடத்தில் குறைவான இனப் பாகுபாட்டுக்கு ஆளாகின்றனர். இருந்தபோதும், சிங்கப்பூரில் பெரும்பான்மையாக உள்ள சீன இனக்குழுவைக் காட்டிலும் சிறுபான்மையினர் இன ரீதியான பாகுபாடுகளை அதிகம் உணர்வதாகக் கொள்கை ஆய்வுக் கழகம் வெளியிட்ட அண்மைய ஆய்வு காட்டுகிறது.

இன, சமய நல்லிணக்க நலன்களை இடித்துரைக்கும் அரசு சாரா அமைப்பான 'ஒன்பீப்பள். எஸ்ஜி'யுடன் நடத்தப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான ஆய்வின்படி, 18.4 விழுக்காட்டு மலாய் இனத்தவரும் 16.7 விழுக்காட்டு இந்திய இனத்தவரும் வேலைக்காக விண்ணப்பிக்கும்போதும் பதவி உயர்வுக்கான பரீசிலனையின்போதும் இனப்பாகுப்பாட்டைச் சந்திப்பதாக உணர்வதாய்க் கூறியுள்ளனர்.

இத்தகைய பிரிவினரின் விழுக்காடு, முந்தைய ஆண்டு பதிவான விகிதங்களைக் காட்டிலும் குறைவு. 2018, 2013ஆம் ஆண்டுகளில் வெளிவந்த ஆய்வறிக்கைகளில் மலாய்க்காரர்களிலும் இந்தியர்களிலும் ஏறத்தாழ கால்வாசிக்கும் அதிகமானோர் இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

ஒவ்வோர் அறிக்கையுமே 4,000க்கும் அதிகமான சிங்கப்பூரர்களின் பதில்களை ஆராய்ந்துள்ளது.

சீன இனத்தவரைப் பொறுத்தவரையில் 3.7 விழுக்காடு மட்டுமே வேலைக்காக விண்ணப்பிக்கும்போதும் பதவி உயர்வுக்கான பரீசிலனையின்போதும் பாகுபாட்டை உணர்வதாகக் கூறினர்.

## பொதுவான பாகுபாடு

2018ஆம் ஆண்டின் ஆய்வுக்குப் பிறகு, பாகுபாடு எதிர்நோக்குவோரின் விழுக்காடு ஒட்டுமொத்தமாகக் குறைந்துள்ளது. வேலையிடத்தில் சீன இனத்தவர் பொதுவாக இனப் பாகுபாட்டைக் குறைவாக உணர்வதாக ஆய்வு குறிப்பிடுகிறது.

கிட்டத்தட்ட ஆறு விழுக்காட்டுச் சீன சிங்கப்பூரர்கள், வேலையிடத்தில் சில நேரங்களில் அல்லது அடிக்கடி அல்லது மிக அதிகமாக இனப்பாகுபாட்டை உணர்வதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், மலாய் இனத்தவரில் 23.7 விழுக்காட்டினரும் இந்திய இனத்தவரில் 23.4 விழுக்காட்டினரும் மற்ற இனத்தோரில் 20.6 விழுக்காட்டினரும் இவ்வாறு உணர்வதாகக் கூறினர்.

இந்த விகிதங்கள், 2018ல் பதிவானவற்றைக் காட்டிலும் குறைவு.

வேலையிடத்தில், பாகுபாடு தொடர்பான ஒட்டுமொத்த உணர்வுமே குறைந்திருப்பதாக பிப்ரவரி 3ஆம் தேதி வெளியிடப்பட்ட ஆய்வு குறிப்பிடுகிறது.

இதற்கிடையே, 2024ல் வேலை கிடைப்பதிலும் பதவி உயர்வு பெறுவதிலும் பாகுபாட்டை எதிர்நோக்குவதை ஏழு விழுக்காட்டினர் உணர்வதாகவும் ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது.

## மொழிப்புழக்கத்தால் பாகுபாடு

வேலையிடத்தில் அதிகப் பாகுபாட்டை எதிர்நோக்குவோர், தங்களுக்குப் புரியாத மொழிப்புழக்கத்தால் வேலைச்சூழலில் புறந்தள்ளப்படுவதை உணர்வதாகக் கூறினர். இப்பிரிவினரின் விழுக்காடு, 57.7.

இதற்கிடையே, பதவி உயர்வு பெறுவோருக்கு அவர்கள் தகுதியைக் காட்டிலும் இனம் கருத்தில் கொள்ளப்படுவதாக ஆய்வில் பதிலளித்த 47.7 விழுக்காட்டினர் கூறியுள்ளனர்.

வேலையிடப் பாகுபாடு தொடர்ச்சியாக ஏற்படும் ஒரு விவகாரம் என ஒன்பீப்பள்.எஸ்ஜி அமைப்பின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தின்போது அந்த அமைப்பின் நிர்வாகக் குழுவைச் சேர்ந்த லெனர்ட் லிம் கூறினார்.

வேலையிடப் பன்முகத்தன்மை குறித்த தம் அமைப்பின் உத்திகளையும் திரு லிம் விவரித்தார்.

janark@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.